Registered as a News paper in Ceylon விலை சதம் 10

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
THE EELA NADU
தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 [ 31-10-67] இதழ் 332
யாழ்ப்பாணம் பிலவங்க ஐப்பசி 14 றஜப் 26 செவ்வாய்க்கிழமை

ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
கே. என். எம்.
மீறன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 585

# 12 ஆயிரம் அடி ஆழத்தில் வடக்கில் பெட்ரோல் ஊற்று

## பிரெஞ்சு நிபுணர்களின் ஆராய்ச்சி பயனளிக்கிறது

(நமது நிருபர் வி. நவரத்தினராஜா)

காங்கேசன்துறை, திங்கள்

வடபகுதியின் பல்வேறு இடங்களிலும் கடந்த பல மாதங்களாக பெற்றோல் எண்ணெய் வள ஆராய்ச்சியில் ஈடுபட்டுவரும் பிரெஞ்சு நிபுணர்கள் தாளையடியிலிருந்து ஐந்தாவது மைல் தூரத்திலிருக்கும் செம்பியன்பற்று என்னுமிடத்திலுள்ள 'மாமுனை'ப் பகுதியிலும் 'குடாரப்பு' என்னுமிடத்திலும் பெற்றேல் 12,000 அடி ஆழத்தில் ஊறுவதாகக் கண்டுபிடித்துள்ளனர்.

அண்மையில் நடத்திய ஆராய்ச்சியில் புங்குடுதீவிலும் பெற்றேல் ஊறுவதாகப் பிரெஞ்சு நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

பிரெஞ்சு நாட்டு நான்கு நிபுணர்களான பிறயோன், மொறிஸ், ஒட்டா, ஒப்சேவர் லராயர் ஆகியோரின் உதவியுடன் இலங்கை பெற்றேலியம் கூட்டுத்தாபனமும், நிலவியல் ஆராய்ச்சி நிலையமும், இலங்கை அரச கடற்படையினரும் ஒன்று சேர்ந்து நடாத்தி வரும் பெற்றேல் எண்ணெய் வள ஆராய்ச்சிகள் வெற்றியடைந்ததுடன் மேற்குறிப்பிட்ட மூன்று இடங்களிலும் இரண்டாவது தடவையாக ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

பிரெஞ்சு நிபுணர்கள் நிலத்தின் அடியில் 'டைனமைட்' வெடி வைத்து வெடிக்கும் பொழுது நிலத்தின் அடியில் நடைபெறும் மாற்றங்களை மின்சாரத்தால் இயங்கும் நுண்ணிய சக்தியுடைய கருவி உடனுக்குடன் படங்களைப் பிடித்து வந்தது. இதைப் பரிசீலனை செய்தபோதே எண்ணெய் ஊறுவது தெரிய வந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

பெட்றேல் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்ட மூன்று இடங்களான செம்பியன் பற்று [மாமுனை], குடாரப்பு, புங்குடுதீவு ஆகிய இடங்களில் இரண்டாவது முறையான ஆராய்ச்சி நடத்துகையில் ஒவ்வொரு 'டைனமைட்' வைத்த பின்பு நிலத்

[8-ம் பக்கம் பார்க்க]

இரத்தின

## கற்கள் கடத்த முயன்றார்

காங்கேசன்துறை, திங்.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு பலாலி விமான நிலையம் மூலமாகப் பிரயாணம் செய்யவிருந்த பிரயாணி ஒருவரிடமிருந்து 2000 ரூபா பெறுமதியான இரத்தினக் கற்கள் இன்று பறிமுதல் செய்யப்பட்டன.

கொழும்பு வர்த்தகர் எனக் கூறப்படும் இவர் இவ்

[8-ம் பக்கம் பார்க்க)

### வர்த்தகமந்திரிபயணம்

கொழும்பு. திங்கள்

இலங்கைக்கும் சீனவுக்குமிடையேயுள்ள அரிசி - றப்பர் பண்டமாற்று வர்த்தக ஒப்பந்தத்தைப் புதுப்பித்து புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக இலங்கை வர்த்தக மந்திரி டாக்டர் எம். வி. பி, பீரிஸ் இன்று காலை பீக்கிங் பிரயாணமானார்.

வர்த்தக மந்திரி தலைமையில் செல்லும் வர்த்தக தூதுக்குழு அடுத்த மாதம் புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## சோவியத் தூதுக்குழுவின் யாழ்ப்பாண விஜயம்

குரும்பசிட்டி, திங்கள்

சோவியத் ருஷியா புரட்சியின் 50-வது ஆண்டுவிழா வைபவங்களில் கலந்து கொள்வதற்கு இலங்கை வந்துள்ள மூவர் கொண்ட கலாச்சாரத் தூதுக் குழுப் பிரதிநிதிகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணம் விஜயம்செய்கின்றனர். இவர்களுடன் சோவியத் ஸ்தானிகராலய கலாச்சார அதிகாரி திரு. எல். எம். சூவுக்கோல்வும் வருகின்றார்.

யாழ்ப்பாணத்தில் சரித்திர, சமய, கலாச்சாரம் வாய்ந்த முக்கிய இடங்

[8-ம் பக்கம் பார்க்க ]

கொழும்பு பல்கலை கழக

## மாணவர் கஷ்டத்தை போக்க மந்திரி உறுதி

கொழும்பு, திங்கள்

கொழும்பு பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்கள் எதையும் நிவர்த்தி செய்யத் தாம் அவசியமான நடவடிக்கைகள்எடுப்பதாக இன்று கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை தம்மைச் சந்தித்த பல்கலைக்கழக மாணவர்கள், கல்வி அமைச்சின் அதிகாரிகள் ஆகியவர்களிடம் கூறினார்.

பல்கலைக்கழகத்தை முன்னிருந்த நிலைக்கு மீண்டும் திருத்தி அமைப்பதற்குக் கஸட் அறிவித்தல் மூலம் எதுவும் செய்யச் சட்டம் இடம்தராதென்பதால் பாரிலிமெண்டில் பிரேரணை கொண்டுவருவதாக மந்திரி வாக்களித்தார்.

மாணவர்கள் தொழிலில் அமர்ந்த பின் திருப்பிக் கொடுக்கக்கூடியதானகடன் வசதி பற்றி மந்திரி சபையில் தெரிவித்து திறைசேரி மூலம் ஏற்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகவும் மந்திரி தெரிவித்தார்.

## தமிழரசுத் தலைவர்கள் மீண்டும் பிரதமரைச் சந்திப்பர் ?

கொழும்பு, திங்கள்

தமிழரசுக் கட்சித்தலைவர்கள் மீண்டும் பிரதம மந்திரியைச் சந்தித்துப் பேசவிருக்கிறார்கள் என்று எதிர்பார்க்கப்படுன்கிறது.

கட்சியின் கொள்கைகளுக்குச் சங்கடம் ஏற்படுத்தும் வகையில் இனிமேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் பார்த்துக்கொள்ளும் படியும்அப்படியானநிலைமை ஏற்பட்டால் தங்களின் அரசியல் சார்பு நிலைமையைப் புனராலோசனை செய்ய நேரலாமென்றும் அவர்கள் பிரதமரிடம் தெரிவிப்பார்கள் என்று நம்பப்படுகின்றது.

தமிழரசுக் கட்சியின் பாரிலிமெண்டரிகுழு அடுத்த மாதம் 4-ந் திகதி திரு. செல்வநாயகம் வீட்டில் சந்திக்கவிருக்கிறது நவம்பர் 15 அல்லது 16-ம் திகதி தமிழரசுக்கட்சியின் காரியக் கமிட்டி யாழ்ப்பாணத்தில் கூடுமென்றும் அதே காலத்தில் பொதுச்சபையும்யாழ்ப்பாணத்தில் கூடுமென்றும் கருதப்படுகின்றது.

திருக்கோணமலைத் துறைமுகத்தை தேசியமயமாக்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருந்தாலும் அவசர கால நிலைமையின்கீழ் துறைமுக சேவைகள் சிறிதுகாலத்துக்குகூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்படாமல் கடற்படையின் பொறுப்பில் வைக்கப்படலாமென்று ஷேஷ்யம் நிலவுகின்றது.

### ஏல விற்பனை

காங்கேசன்துறை, திங்.

கள்ளக்கடத்தல் செய்யப்பட்ட துணிவகைகளை வடபகுதி சுங்கப் பகுதியினர் ஏல விற்பனை செய்ததில் இரு நாட்களில் ரூ 37,000 வரையான விற்பனவு நடைபெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது. இம்மாதம் 26-ம் 27-ம் திகதியும் நடைபெற்றுள்ள விற்பனையே இவை.

### பாவித்த முத்திரையை பாவித்தாராம்

பாவித்த முத்திரையை மீண்டும் விற்பனை செய்ய எத்தனித்த அரசாங்க ஊழியர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். இச்சம்பவம் யாழ்ப்பாணம் கச்சேரியில் நேற்று நடைபெற்றது.

இதுசம்பந்தமாக இருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு, பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

[ந. நி.

BAYER
பொலிடோல் மற்றும் பேயர் இரசாயனப் பொருட்கள்
கிடைக்குமிடம்:
புறேவின்ஷல் டிஸ்றிபியூட்டர்ஸ்
ஓல்டோஸ் கட்டிடம், யாழ்ப்பாணம்.
வ. வி. உ. கூ. சமாசம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தரமான துணிகள் இங்கு உருவாகவேண்டும்'

''மானிப்பாய், திங்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் துணிகளைப் போன்ற உயர்ந்தரகத்துணிகளை இங்குள்ள கூட்டுறவு நெசவுச் சங்கங்கள் உற்பத்தி செய்ய வேண்டும்'' என சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. கே. எஸ். பொன்னுத்துரை யாழ்ப்பாணம் ஐக்கிய நெசவுச் சங்கங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

''சங்கங்களினால் உற்பத்தி செய்யப்படும் துணிகள் இவ்வித தரம் வாய்ந்தவையாக இருக்குமேயானால் அவைகளின் விற்பனைக்கு இங்கு மதிப்பு ஏற்படுவதுடன், இந்தியாவிலிருந்து சேலைகள் கடத்தப்படுதலும் நின்றுவிடும்'' என்று மேலும் அவர் சுட்டிக் காட்டினார். பல காலங்களாகியும் இங்கு நெசவுத் தொழில் முன்னேற்றமடையாததையிட்டுக் குறிப்பிட்ட அவர், பல நெசவுத் தறி நிலையங்களின் தேவை பற்றியும் வலியுறுத்தினார்.

''நெசவுச் சங்கங்கள் கருத்தரங்குகளை நடாத்தி உயர்ந்தரக நவீன துணிகளை எப்படி உற்பத்தி செய்யலாம் என்பதைப் பற்றி ஆராய வேண்டும். இதனால் அமெரிக்காவிலே கூடப் பெரிய மதிப்பைப் பெற்றுள்ள இந்தியச் சேலைகளுக்கு நிகரான சேலைகளை இங்கே உற்பத்தி செய்ய வழி பிறக்கும்'' என்றும் அவர் கூறினார்.

தலைமை வகித்த வடபகுதி சிறு கைத்தொழில் திணைக்கள அதிபரும் சமாசத் தலைவருமாகிய திரு. எஸ். கந்தவனம் பேசுகையில் ''நெசவுச் சங்கங்கள் இங்கே உற்பத்தி செய்யும் துணிகள் நல்ல தரம் வாய்ந்தவையாக இல்லாதபடியால் அவைகளை விற்பனை செய்ய முடியாதிருக்கின்றது. இதன் காரணமாக அதிகமான துணிகள் விற்பனையாகாது தேங்கிக் கிடக்கின்றன'' என்றும் உயர்ந்த தரமுடைய துணிகளை உற்பத்தி செய்ய முடியாமைக்குக் காரணம் நல்ல நூல்கள் அவைகளுக்குக் கிடைக்காமையே என்றும் அவர் சுட்டிக் காட்டினார். காரியதரிசி திரு. து. சீனிவாசகம் நன்றி கூறினார்.

# 'இப்போதுள்ள கல்வி அமைப்பில் தனியாருக்கு இடமில்லை'

யாழ்ப்பாணம், செவ். 'இலங்கையின் கல்வி அமைப்பில் தனியார் பகுதிக்கு இடமில்லாதிருக்கிறது. தனிப்பட்ட பாடசாலைகள் தாம் அளிக்கும் கல்விக்கு குந்தகமில்லாமல் தொடர்ந்து நடத்த முடியாது என்பதை 7 வருட அனுபவம் தெரிவித்துள்ளது. இப்போதுள்ள நிலையில் தனியார் பாடசாலை இயங்குவது மிகவும் கஷ்டமானதொரு காரியமே.'

இவ்வாறு தேசிய ஆசிரியர் [தனியார் பாடசாலை] சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய சங்க பொதுக் காரியதரிசி திரு. சிட்னி வனசிங்கா கூறினார். திரு. வனசிங்கா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்கள் இப்பாடசாலைகளின் முகாமையாளரால் இழைக்கப்படும் பலவித அநீதிகளுக்கெதிராகப் போராடுவதற்கு ஐக்கியத்தைத் தம் முள்ளேயே வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் இவ்வித பிரச்னைகளை ஐக்கியத்தின் மூலமாகவே தீர்த்துக் கொள்ள முடியும்.

[5-ம் பக்கம் பார்க்க]

# 'காரைநகரில் மரக்காலை நிறுவித்தருக'

யாழ்ப்பாணம், செவ். சுமார் 25,000 பேர்வாழும் காரைநகர்ப்பகுதியில் ஒரு விறகுகாலை இல்லாத காரணத்தினால் இப்பகுதிமக்கள் தமது மரத்தேவைகளையும் விறகுத்தேவையையும் பெற்றுக்கொள்வதில் கஷ்டப்படுகிறார்கள்.

இதுவிஷயம் சம்பந்தமாக காரைநகர் பொதுநல சேவைச்சங்கக் காரியதரிசி திரு. எஸ். செல்லத்துரை, காரைநகரில் அரசாங்கவிறகுகாலை ஒன்றை நிறுவித்தருமாறு வன இலாகா அதிபருக்கு கடிதமூலம் கேட்டுள்ளார்.

அரசாங்கம் ஒரு விறகு காலையை அமைப்பதற்கு மேற்படி சங்கம் நிலம் ஒழுங்கு செய்துள்ளதாகவும் இந்நிலத்தைக்கூடியசீக்கிரம் ஒரு மரக்காலையை நிறுவி காரைநகர்மக்களின் தேவையைப் பூர்த்திசெய்யும்படியும் அக்கடிதத்தில் மேலும் கேட்கப்பட்டுள்ளது.

[வி. நி.]

## வீதிகள் சீர்கேடு

உடுப்பிட்டி, திங்கள் கரவெட்டி மேற்கு, கனுவில் என்னுமிடத்திலுள்ள வீதிகள் பல வருட காலமாகச் செப்பனிடப்படாமல் பழுதடைந்த நிலையில் இருப்பதால் பொதுமக்களின் போக்கு வரத்துக்குப் பெரிதும் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது. மழை காலங்களில் வெள்ளம்தேங்கிநிற்பதினால் வீடுகளுக்குள்ளும் வெள்ளம் புகக்கூடிய அபாயம் ஏற்பட்டுவருகிறது. இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறும், உடனடியாக இவ்வீதிகளைத் திருத்தித்தருமாறும் கனுவில் சன சமூக நிலையத்தினர், நெல்லியடி பட்டினசபையின் விசேஷ ஆணையாளர் திரு. எஸ். ஸி. மாணிக்கவாசகரை நேரில் சந்தித்து முறையிட்டனர். அவர்களின் வேண்டுகோளை ஏற்ற விசேஷ ஆணையாளர் உடனடியாக வீதிதிருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படுமென உறுதியளித்துள்ளார்.

## உரும்பராய்சந்தைப் பெயர்ப் பலகை

உரும்பராய், திங்கள் உரும்பராய் பட்டினசபையாகமாறிப் பல வாரங்களாகியும், சந்தியிலுள்ள சந்தையின் பெயர்ப்பலகையில் தொடர்ந்து 'நீர்வேலி கிராமசபை' என்றே காணப்படுவதாகவும், இதை உடனடியாக 'உரும்பராய் பட்டின சபை' என மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் உரும்பராய் தமிழரசு வாலிப முன்னணிச் செயலாளர் திரு. ந. அரியரத்தினம், உரும்பராய் பட்டின சபைத்தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

அவர் அக்கடிதத்தில் மேற்படி பலகையைப் பார்க்க முடியாதபடி அதற்கு முன்னால் இருக்கும் கொட்டகை மறைத்துக்கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டு, பார்வைக்கு வசதியாக அப்பெயர்ப்பலகையை மாற்றி வைக்குமாறும் கேட்டுள்ளார்.

# உணவுப் பிரச்னை தீர கங்கைதிட்டம் உதவும்

## ஐ. நா. பிரதிநிதி கூறுகிறார்

கொழும்பு, திங்கள் 'மகாவலி கங்கை திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் நாட்டின் உணவுத் தேவையை ஓரளவு பூர்த்தி செய்துகொள்ளக்கூடியதாக இருக்கும். இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் வறண்ட பிரதேசத்தின் 60 சத வீதமான நிலப்பரப்பை விவசாயத்துக்குப் பயன்படுத்தலாம்.'

இவ்வாறு இலங்கையிலுள்ள ஐ நா. ஸ்தாபனத்தின் பிரதிநிதி திரு. அனடோலி குரேமோவ் காலியில் நடைபெற்ற ஐ. நா. தின விழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும்பேசுகையில் கூறியதாவது:

'மகாவலிகங்கைத்திட்டம் ஒரு முக்கியமான திட்டமென்றே கூறவேண்டும். மகாவலி கங்கையின் மேல் மிச்சமான நீரை பிரயோசனமான முறையில் பயன்படுத்த இத்திட்டம் வழி வகுக்கிறது. வறண்ட பிரதேசத்தை வளம்படுத்தி நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்ய இது உதவும். இதனால் உணவுத் தேவைக்காக வெளிநாடுகளுக்குச்செல்லும் பணத்தை இலங்கை மிச்சப்படுத்தலாம்.

இத்திட்டத்துக்கு ரூ. 50 கோடி கடனுதவி தேவைப்படுகிறது. இதுபெரும் சிரமமான காரியம்தான். ஆனால் உணவுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் பணத்தை மிச்சப்படுத்த இதுதான் ஒரேவழி,'

காலி அரசாங்க அதிபர் திரு. டி. எம். ஏ. ஸ்பெல்ட்வின் இவ்வைபவத்துக்கு தலைமைதாங்கினார்.

## எம்.பி. மூலம் கோருவர்

யாழ்ப்பாணம், செவ். வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலைக் கட்டிடங்கள் இடிந்து விழும் நிலையிலுள்ளதாகவும், இது விஷயமாக உடனடியாகநடவடிக்கைஎடுக்குமாறு அமைச்சருக்கு எடுத்துக்கூறும்படியும் பிரஸ்தாப பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கத்தைக் கேட்பதென மேற்படிசங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பாடசாலைக்கு முறையான ஒரு விளையாட்டுமைதானம், பாடசாலை இடநெருக்கடி, விவசாயத்துக்கான நிலம், மலசலகூடம்ஆகியனவற்றையும் திரு அமிர்தலிங்கம் மூலம் கல்வி அமைச்சுக்கு எடுத்துக்கூறுவதென முடிவு செய்யப்பட்டது. [வி. நி]

## 11 தடவை சென்றாராம்

கிளிநொச்சி, திங்கள் எல்கடுவ தோட்டத்தைச் சேர்ந்த திரு. எம். எஸ். சுப்பிரமணியம் என்பவர் இந்தியாவுக்குச் செல்வதற்கான பாஸ்போர்ட் பெறுவதற்காக கொழும்புக்குப் பதினொரு தடவைகள் செல்ல வேண்டியிருந்ததாகவும் இதனால் வீணான பணச்செலவும் அலைச்சலும் அவருக்கு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி இவர் கிளிநொச்சி எம். பி. யிடம் முறையிட்டதன் பேரில் அவர் பிரதமருடன் இதுசம்பந்தமாகத் தொடர்புகொண்டுள்ளாராம்.

எல்லோருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள் !
யாழ் நகரில் முதன்மை வாய்ந்த
''லேடிஸ்'' உடைகள் தயாரிப்பாளர்களும்
சாறிகளுக்கு (குஞ்சம் டசல்ஸ்) இணைப்பவர்களும்
அன்னம்ஸ் சாறி வேக்ஸ்
27/1, மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம்.
[புதிய பஸ் ஸ்டான்டுக்கு முன்]


அன்பர்கள்
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
தீபாவளி
வாழ்த்துக்கள்
ஈஸ்வர் கோப்பரேஷன்
[றேடியோ உப-உறுப்புக்கள் இறக்குமதியாளர்கள்]
18, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள் !
Sonnenschein
நீடித்து உழைப்பது

சொனென்ஷீன்
பற்றறி ஒன்றே
ஜெர்மன் தயாரிப்பு
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்
துரை அன் கோ
23/3, ஸ்ரான்லி றோட், — யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள் !
ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்பெறும்
ஆ. நல்லதம்பி
(இரத்தினக்கல், நகை வியாபாரம்)
75, கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.
தந்தி: ''கமலம்''
போன்: 664

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!
ஞானம்ஸ் ஸ்ருடியோ
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7067
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘கூட்டுச்சேராக் கொள்கையை இந்தியா கைவிடவே மாட்டாது’

## ஜபல்பூர் கூட்டத்தில் பிரதமர் இந்திரா காந்தி

ஜபல்பூர், ஒக். 30

வெளியிலிருந்து எவ்வளவு நெருக்கடி இருந்தபோதிலும், இந்தியா தனது கூட்டுச்சேராக் கொள்கையைக் கைவிடப்போவதில்லை என்று நேற்று ஜவல்பூரில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி வலியுறுத்தினார்.

இந்தியா, தனது கூட்டுச்சேராக் கொள்கையைக் கைவிட வேண்டுமென்றும், அதன் நட்பு நாடுகளிடமிருந்து அது தனிப்படுத்தப்பட வேண்டுமென்றும், பல நாடுகள் விரும்புவதாகப் பிரதமர் இந்திரா குறிப்பிட்டார்.

### ‘கஷ்டம் எமக்கு பழக்கம்’

இந்தியா அப்படி ஒன்றும் செய்யப்போவதில்லை என்று கூறிய திருமதி இந்திரா காந்தி, கூட்டுச்சேராக் கொள்கைப் பாதை கஷ்டமான பாதை எனக் கூறினார். ஆனால், கஷ்டமான நிலைமைகளுக்கு இந்தியா பழக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

எல்லா நாடுகளுடனும் நட்புறவுடன் வாழுவதே இந்தியாவின் விருப்பமென்றும் பிரதமர் வலியுறுத்தினார்.



# ‘நாட்டின் ஒற்றுமைகு குறுக்கே நிற்கமாட்டேன்’

## மாணவர் மத்தியில் அண்ணா

சென்னை, ஒக். 30

சென்னையில் நேற்றுக் கூடிய தமிழக மாணவர் சபை, மொழிசம்பந்தமாகக் காலஞ்சென்ற பிரதமர் ஜவகர்லால் நேரு அளித்த வாக்குறுதிகளைச் சட்டமாக்கும்படி மத்திய அரசாங்கத்தைக் கோரும் தீர்மானமொன்றை நிறைவேற்றினர்.



இக்கூட்டத்துக்குத் தலைமைவகித்துப்பேசிய தமிழக முதல்வர் திரு. சி. என். அண்ணாதுரை, இந்திய நாட்டின் ஒற்றுமைக்குக் குறுக்கேதாம் ஒருபோதும் நிற்கமாட்டாரென்று கூறினர். ஆனால் அதே நேரத்தில், ராஜ்யங்களில் இந்தித் திணிப்பு செய்யப்பட மாட்டாதென மத்திய அரசு உறுதியளிக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

# ஒலிம்பிக் ஒத்திகையில் ரஷ்யாவுக்கு முதலிடம்

## அமெரிக்கா இரண்டாவது

மெக்ஸிக்கோ, ஒக். 30

மெக்ஸிக்கோ நகரில் நடந்து முடிந்துள்ள ஒலிம்பிக் ஒத்திகை விளையாட்டுப் போட்டிகளில், அதிகமான தங்கப்பதக்கங்களை ரஷ்யா சுவீகரித்துள்ளது.

தனக்கு அடுத்தபடியாக வந்த அமெரிக்காவைவிட ரஷ்யா இரண்டு மடங்கு தங்கப் பதக்கங்களைப் பெற்றது.

போட்டி இறுதியில்’ ரஷ்யா 43 தங்கப்பதக்கங்களை எடுத்துக்கொண்டது. அமெரிக்கா 21 தங்கப்பதக்கங்களை எடுத்தது.

### பம்பாயில் கண்காட்சி

பம்பாய், ஒக். 30

பம்பாயில் சர்வதேச உல்லாசப் பிரயாணிகள் காட்சியொன்று நேற்று ஆரம்பமாகியது. இக்கண்காட்சியில் 15 நாடுகள் பங்குபற்றுகின்றன.

### எக்ஸ் போ-67 முடிவுற்றது

ஒட்டாவா, ஒக். 30

கனடாவின் சர்வதேச பொருட்காட்சியான ‘எக்ஸ் போ-67’ முடிவடைந்துள்ளது.

கடந்த 6 மாதங்களாக நடைபெற்ற இப்பொருட்காட்சிக்கு 5 கோடி மக்கள் வந்திருந்தனர்.

இத்தொகை உலகப் பொருட்காட்சிகளுக்கு ஒரு சாதனையாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### மே. ஜெர்மனியில் மன்னர் ஹுசெயின்

பொன், ஒக், 30

ஜோர்தான் மன்னர் ஹுசெயின் மேற்கு ஜெர்மனி வந்து சேர்ந்துள்ளார். அவர், மேற்கு ஜெர்மன் தலைவர்களுடன் மேற்கு ஆசியா, அரபு அகதிகளுக்கு உதவி ஆகிய விடயங்கள் பற்றிப் பேசுவார்.

பிரான்ஸில், பிரெஞ்சு ஜனாதிபதி டி கோலுடன் பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு, மன்னர் ஹுசெயின் பாரிஸிலிருந்து நேரே பொன் வந்துசேர்ந்தார்.

### பாப்பரசரின் உடல் நிலை

வத்திக்கன், ஒக். 30

பாப்பரசர் போலின் உடல்நிலையில் கவலைக்கிடமாக எதுவுமில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டதால், அவர் கலந்துகொள்ளவிருந்த [illegible] நிகழ்ச்சிகள் [illegible]யப்பட்டன.

வியட்னமுக்கு

### புதிய இராணுவப் பிரிவு

#### தாய்லாந்து அனுப்பும்

பாங்கொக், ஒக். 30

வியட்னமுக்கு 12,000 போர் வீரர் அடங்கிய புதிய இராணுவப் பிரிவு ஒன்றை அனுப்பத் தாய்லாந்து முடிவுசெய்துள்ளது.

இத்தகவலை, தாய்லாந்து உதவிப் பிரதமர் அறிவித்துள்ளார். அவர் தான், தாய்லாந்தின் இராணுவத் தளபதியுமாவார்.

இந்த இராணுவப் பிரிவுக்குத்தேவையான ஆயுதங்கள் தளபாடங்களை அமெரிக்கா அனுப்பி முடிந்ததும், இப்பிரிவு வியட்னமுக்கு அனுப்பப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

### 100 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர்

சைகோன், ஒக். 30

சைகோனுக்கு வடக்கே, கம்போடிய எல்லையில், தென் வியட்னம், அமெரிக்கத் துருப்புகளுக்கும் வியட்காங்கியருக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பில் 100 வியட்காங்கியர் கொல்லப்பட்டதாக இங்கு அறிவிக்கப்பட்டது. அமெரிக்கப் போர் வீரர் ஒருவரும் கொல்லப்பட்டார். தென் வியட்னம் துருப்புக்களின் சேதம் பற்றித் தெரிவிக்கப்படவில்லை.

அமெரிக்க

### விமானங்கள்சுட்டு வீழ்த்தப்பட்டன

ஹனோய், ஒக். 30

நேற்று, 4 அமெரிக்க விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாக வட வியட்னம் அறிவித்துள்ளது.

இந்த 4 விமானங்களில் ராட்சத ‘பி-52’ விமானமும் ஒன்று.

#### 16 விமானங்கள் காணவில்லை

கடந்த வாரம் மட்டும் 16 அமெரிக்க விமானங்கள் காணமற் போய்விட்டதாக அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வியட்னம் போர் ஆரம்பமாகிய பிறகு ஏற்பட்ட மிக மோசமான விமான இழப்பு இதுவென வர்ணிக்கப்பட்டுள்ளது.

### மா-சே-துங்குக்கு கண்டனம்

வார்சோ, ஒக் 30

சீனத் தலைவர் திரு. மா-சே-துங்கை போலந்து தலைவர் திரு. கோமுல்கா கண்டித்துள்ளார்.

வட வியட்னமுக்கு உதவி செய்வதில், சோவியத் யூனியனுக்கும் மற்றும் கம்யூனிஸ்ட் நாடுகளுக்கும் சீ[illegible] [illegible] திரு. கோமுல்கா கூறினர்.

# 1,300 விதைக்கிழங்கு

## வடபகுதியில் விநியோகம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வடபகுதில் உருளைக் கிழங்குப்பயிர்ச்செய்கையையொட்டி நேற்று முன்தினம் 1,300 அந்தர் விதை உருளைக்கிழங்கு சுன்னாகத்தில இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. வலிகாமம் கிழக்குப் பகுதியில் சங்கங்கள் மூலம் விதை கிழங்குக்குப் பணம் கட்டிய விவசாயிகளுக்கு இக்கிழங்கு வழங்கப்படுமாம்.

யாழ்ப்பாண விவசாயப் பகுதி அதிபர் திரு. என். ஜெயசீலனின் முயற்சியினுல் 8,500 அந்தர் விதை உருளைக்கிழங்கு இறக்குமதிக்கு ஒழுங்கு செய்யப்பட்டது. ஜெர்மன், ஒல்லாந்து ஆகிய இடங்களிலிருந்து இலங்கைக்கு விதை உருளைக் கிழங்கு இறக்குமதி செய்யப்படுகிறது. ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 500 டன் விதை உருளைக்கிழங்கில் வடபகுதி 100 டன், விதை உருளைக் கிழங்கைப் பெறுகிறது.

சுன்னாகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 1,300 அந்தர் உருளைக்கிழங்கில் கோப்பாய் வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் 250 அந்தரும், கோப்பாய் தெற்குச் சங்கம் 150 அந்தரும், புத்தகல்லடி ப. நோ. கூ. சங்கம் 75 அந்தரும், நீர்வேலி தெற்கு ப நோ. கூ. சங்கம் 50 அந்தரும், வடக்குச் சங்கம் 16 அந்தரும், சிறுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் 50 அந்தரும், நவக்கிரி ப. நோ. கூ. சங்கம் 61 அந்தரும், கோப்பாய் மத்திய ப. நோ. கூ. சங்கம் 130 அந்தரும், ஆவரங்கால் ப. நோ. கூ. சங்கம் 423 அந்தரும், மேலும் மூன்று சிறு சங்கங்கள் 30 அந்தரும் பெறுகின்றன.

மிகுதி விதை உருளைக் கிழங்கு நவம்பர் 15-ந் திகதிக்குள் வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது. உருளைக்கிழங்குப் பயிர் செய்கையில் ஈடுபட விரும்பும் இன்னும் விதை கிழங்குக்குப் பணங்கட்டாத விவசாயிகள் தமக்குக் கிட்டிய சங்கங்கள் மூலம் பணத்தைக் கட்டித் தேவையான விதை கிழங்கைப் பெற்றுக் கொள்ளலாமென விவசாயப்பகுதி அதிபர் திரு. என். ஜெயசீலன் வடபகுதி விவசாயிகளுக்கு அறிவித்துள்ளார்.

# முரசு மோட்டை விவசாயிகளுக்கு நிவாரண உதவி

யாழ்ப்பாணம், செவ்.

முரசுமோட்டை ஊரியான் குளப்பகுதியில் மழையினால் பயிர்ச்சேதம் அடைந்த விவசாயிகளுக்கு அரசாங்கம் வேண்டிய உதவிகளை அளிக்கும் எனத் தெரிகின்றது.

மழைநீர் வயல்களில் தேங்கி நின்று நெற்பயிர் சேதமடைந்த விவசாயிகளுக்கு அப்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன்திட்டத்தின்கீழ் விதைநெல்லை வழங்க காணி அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்துவருகின்றனர்.

இப்பகுதி விவசாயிகளைக் கொண்ட குழுவொன்று நேற்றுமுன்தினம் வடபகுதி உதவி அரசாங்க அதிபரைச் சந்தித்து தமது குறைகளைத் தெரிவித்ததைத் தொடர்ந்தே மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரிகின்றது.

மீண்டும் இவ்வயல்களில் நெல்விதைக்க காலதாமதமாகினால் நாற்று நெல்களே இவர்களுக்கு வழங்கப்படுமென்றும் காணிப்பகுதியைச் சேர்ந்த உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [ந. நி.]

### நெஸ்பிறே இங்கு தயாரிக்கலாம்

கொழும்பு, திங்.

தற்போது பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள பால் உணவுகளில் ஒன்றுன ‘நெஸ்பிறேயை இலங்கையிலேயே தயாரிக்கக்கூடிய வாய்ப்பிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போஷாக்கு உணவுஉற்பத்தி ஸ்தாபனம் இதற்கான முயற்சி மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. இவ்விதம் நெஸ்பிறே இங்கு தயாரிக்கப்பட்டால் பாவனையாளர் அதற்குப் போதிய ஆதரவு அளிக்க வேண்டுமெனவும் இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### எதிர்க்கட்சி அபேட்சகர்

கொழும்பு, திங்கள்

நாத்தாண்டியா இடைத் தேர்தலில் சுதந்திரக் கட்சி எதிர்க்கட்சி சார்பில் திரு. புரூேட்டஸ் திசேராவை அபேட்சகராகநிறுத்தமுடிவு செய்துள்ளது. அடுத்த மாதம் 11-ம் திகதி புத்தளம் கச்சேரியில் இதற்கான நியமனப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

நியூஸிலாந்தில்

### வியட்னம் எதிர்ப்பு

வெலிங்டன், ஒக். 30

நியூஸிலந்தில், ஒக்லாந்து நகரில், நேற்று வியட்னம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன.

இந்த ஆர்ப்பாட்டங்களில் ஏறத்தாழ 3,000 பேர் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள், நியூஸிலாந்திலுள்ள அமெரிக்க ஸ்தானிகரின் காரியாலயத்துக்குச் சென்றனர். பொலிஸாருடன் ஏற்பட்ட மோதலில், 10 பேர் காயமடைந்தனர். 12 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

### 7 வயது மாணவனின் பரிதாப மரணம்

கொழும்பு, திங்கள்

பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த 7 வயதுச் சிறுவன் நுககொடையிலுள்ள கன்சபா சந்தியில் லொறிமோதி மரணமானர்.

அவர் அணிந்திருந்தஉடைகள் சந்தியில் சிதறுண்டு கிடந்தன. லொறியின் ஹோர்ண் சப்தத்தினுல் அதிர்ச்சியுற்றதன் காரணமாகவே சிறுவன் ஓடிவந்துகொண்டிருந்த லொறியின் முன்னால் தடுமாறிச் சென்றதாகவும் இதனாலேயே விபத்து நேர்ந்திருக்கலாமெனவும் சந்தேகிக்கப்படுகிறது.

### இஸ்ரேல் பிரதமர் வேண்டுகோள்

டெல்அவிவ், ஒக். 30

மேற்கு நாடுகளிலிருந்து அதிக அளவில் யூதர்கள் வந்து இஸ்ரேலில் குடியேற வேண்டுமென இஸ்ரேலியப் பிரதமர் திரு. எஷ்கொல்கேட்டுக்கொண்டுள்ளார்.

‘பெரிய இஸ்ரேல்’ அமைக்கும் நோக்கத்துடனேயே பிரதமர் இவ்விதம்கேட்டுக் கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு (1-11-67) புதன்கிழமை ஈழநாடு காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் வியாழக்கிழமை (2-11-67) மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

## மணிவாக்கு

எழுந்திரு; விழித்திரு; பெரியோர்களைத் துணைகொண்டு உன் இலட்சியத்தை அடை.

-சுவாமி விவேகானந்தர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க ஆண்டு ஐப்பசி மீ 14உ (31-10-67)


## அரசாங்க ஊழியர் அசிரத்தை

வெள்ளத்தினாலும்புயலினாலும் வீடுவாசல்களை இழந்தும், பொருள்பண்டங்கள் அழிந்தும் நிர்க்கதியாகியிருக்கும் சிலாபப்பகுதி மக்களுக்கு இதுவரை நிவாரண உதவி எதுவும் வழங்கப்படவில்லையென்றும் இதற்கு அரசாங்க ஊழியர்களே பெரும்பாலும் காரணமென்றும் அங்குநேரில் சென்று பார்வையிட்ட பிரதமர் தெரிவித்திருக்கிறார். இந்த ஊழியர் மீது உடன் தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று அவர் சமூகசேவை அமைச்சருக்கும் தெரிவித்திருக்கிறார். அரசாங்க ஊழியர் சிலர் எவ்விதம் மக்களுக்குச் செய்யவேண்டிய தங்கள் கடமையைச் செய்கிறார்களென்பதை பிரதமரி இதிலிருந்தாவது தெரிந்துகொண்டால் நல்லது.

வெள்ளம், புயல் போன்ற இயற்கையின் சீற்றத்தினால் அப்பாவிகளான மக்கள் இன்னலுற்ற சமயத்தில், அவர்களுக்கு ஆறுதலும் தேறுதலும் அளிக்கவேண்டியது அத்தகைய இன்னல்களுக்குத் தப்பியுள்ளவர்களின் கடமை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் அளிக்கும் நிவாரண உதவியோ மிகக் குறைவானதாகத்தானிருக்கும். இதையும் கூட அவர்களுக்கு வழங்குவதில் அரசாங்க ஊழியர் சிலர் அக்கறை செலுத்தத் தவறினால் அதுபெரும் அநியாயமாகும். இன்னல் படும் மக்களுக்குத்தங்கள் உடல் பொருளைக்கூடக் கொடுத்துதவும அரசாங்க ஊழியரும் உள்ளனர். ஆனால் சிலர் செய்யும் தவறுகள் மற்றையோருடைய நல்ல பெயரையும், தியாகத்தையும் களங்கப்படுத்தி விடுகிறது.

நிவாரண உதவிகள் வழங்கப்படுவதில்மோசடி நடைபெறுவதென்பது பொதுவாகவே கூறப்படும் குறை. ஆனால் சிலாபச் சம்பவத்திற்கு வேறு காரணங்களும் இருக்கலாம். மக்கள் மத்தியில்அரசாங்கத்தின் மீது அதிருப்தியை ஏற்படுத்துவதும் ஒரு காரணமாக இருக்கலாம். அரசாங்கத்தின் கொள்கையையும் நடவடிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள் அரசாங்க ஊழியர்களாக இன்றும் உள்ளனர் என்பது அரசாங்கத்துக்குத் தெரியாததல்ல. தமிழ் மொழிச்சட்ட (விசேஷ) விதிகள் கொண்டுவரப்பட்டபோது, அதை, அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை எதிர்த்து அரசாங்க ஊழியர் பலர் வேலைநிறுத்தம் செய்தனர் என்பது இதற்கு உதாரணம். இதுமட்டுமல்ல தமிழ்மொழிச்சட்ட விதிகளை அமுல் செய்வதிலும் மற்றும் அரசாங்கத்தின் கொள்கைகளை நிறைவேற்றுவதிலும் அரசாங்க ஊழியர்கள் அனைவரினதும் முழுஒத்துழைப்பும்கிடைக்கவில்லை. இதை அமைச்சர்களே பல தடவைகளிலும் வெளிவெளியாகத் தெரிவித்திருக்கின்றனர்.

சிலாபச் சம்பவம்மட்டுமல்ல இதர பல விஷயங்களிலும் இவ்வித அரசாங்க ஊழியர் நடத்தை பற்றிபிரதமர் இனிமேல் வது விழிப்புடனிருப்பது நல்லது.

## இன்றைய பலன்

[31-10-67]

செவ்வாய்க்கிழமை

[ஐப்பசி மாதம் 14உ]

நட்சத்திரம்- அத்தம் இரவு 10-53 மேல் சித்திரை.

திதி- திரயோதசி பி. பகல் 4-51 மேல் சதுர்த்தசி.

சுபநேரம்- 10-33—12-03.

ராகுகாலம்- 3-03—4-33.

மேஷம்- நடந்ததை நினைத்து வருந்ாதே நல்லதைச் செய்

ரிஷபம்- குருவிசுவாசம் கொள்கையில் முன்னேற்றம்.

மிதுனம்- தங்கக்குணம் தரத்திலும் உயர்வு.

கடகம்- நலன் தரும் வரவு, நம்பிக்கைபிறக்கும்.

சிங்கம்- தவிக்கும் உள்ளம், தயக்கமுமுண்டு.

கன்னி- இறைவழி நாட்டம் இன்னலும் மறையும்.

துலாம்- கல்விச்சிறப்பு கலாரசனை.

விருச்சிகம்- பிள்ளைகள் தொல்லை பிறருடன் பகை.

தனுசு- சுற்றம் வாழ்த்தும் சுகமுமுண்டு.

மகரம்- தேடியது கிடைக்கும் தேனான வாழ்வு.

கும்பம்- எண்ணித் துணிக எதிரிகள் உண்டு.

மீனம்- களத்திர வாழ்வு கரும்பாக இனிக்கும்.

— சோதிடக் கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

## நெற்பயிர் செய்கைப் போட்டி

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவில் இம்முறை நெற்செய்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. சில வருடங்களாக குமச்செய்கை இங்குமிகவும் மீன்றியிருந்தது. ஆனால் கண்டும் சிறுதானியச் செய்கையும் நெற்செய்கையும் ஆரம்பமாகியுள்ளது. நெற்செய்கைப் போட்டியை இங்கு விஸ்தரிக்கவிருப்பதால் பலர் நெற்செய்கைக்கு ஊக்கம்காட்டி வருகிறார்கள். முதல் பரிசு ரொக்கப் பணம் 750 ரூபாவாகவும், இரண்டாம் பரிசு 500 ரூபாவாகவும், மூன்றாம் பரிசு 250 ரூபாவாகவும் வழங்கப்படுமென அறியப்படுகிறது.

# தீபாவளி காட்டும் லட்சியங்கள்

தீபாவளி என்று சொன்னவுடன் நம் நாட்டிலும் தென்னாட்டிலும் நரகாசுரன் கதை தான் எவருக்கும் நினைவு வரும்.

இப்பண்டிகை பரத கண்டம் முழுவதுமே கொண்டாடப்படுவதால் அங்கே இடத்துக்கிடம் பல கதைகள் சொல்லப்படுகின்றன.

உதாரணமாக ஒரு கதையை மட்டும் இங்கு கூறுகிறேன்.

## இன்று மறைந்து விட்டனவா?

ஐந்தொழில் புரியும் அம்புலிதாரியாகிய சிவபெருமானுக்கு ஒரு நாள் ஓய்வு எடுக்க வேண்டுமென்று ஆசை வந்ததாம்.

ஓடிப்போய் உமையைக் கேட்டார், ''சக்தி தேவி, எனக்கு இன்று மிகவும் களைப்பாயிருக்கிறது. எத்தனை பல்லூழி காலம் இந்த ஐந்தொழில் செய்துகொண்டிருப்பது? ஒரு நாளாவது 'றெஸ்ட்' வேண்டாமா? இன்று நான் 'லீவு' எடுக்கப்போகிறேன். எனைத்துக் கொண்டு நீயும் நானும் சிறிது நேரம் சொக்கட்டான் ஆடுவோம் வருகின்றாயா?''

''சுவாமி, தங்கள் சித்தம் என் பாக்கியம்'' என்றார் உமாதேவி.

சிவபெருமான் மதவுரியையும், பாம்புகளையும் கழற்றி வைத்துவிட்டு வந்து ஆறுதலாக உட்கார்ந்தார், ஆட்டம் ஆரம்பமாகியது.

பிரபஞ்ச மண்டலங்கள் யாவற்றையும் இயக்கிவைக்கும் மகாசக்தியல்லவா பார்வதி அமையார்? அவளுக்கு மிகுந்த சக்தி எங்கே இரக்கப்போகிறது?

சொக்கட்டான் ஆட்டத்தில் சிவபெருமானுக்கு படுதோல்வி. கேவலம், ஒரு பெண்ணால் எனக்குத் தோல்வி கிடைத்ததே என்று வெட்கமும் துக்கமும் பொங்கிவர, கைலைமலையை விட்டுப்போய் கங்கையுடன் கங்கா தீரத்தில் வசித்தார்.

இதைக் கேள்விப்பட்ட முருகன் உடனே சொக்கட்டான் வித்தையைப் பல பண்டிதர்களிடம் படித்துக் கொண்டுபோய் பார்வதியை ஆட்டத்துக்கு அழைத்து, தாயைப் படுதோல்வியடையச் செய்துவிட்டார்.

இதனை அறிந்த ஞானப் பிரணவ நாதனாகிய மூத்த விநாயகர் தாயின் பக்கம் சென்று விளையாடி மகா வெற்றி ஈட்டினார்.

இந்தக் குழப்படியை எல்லாம் கேள்விப்பட்ட கலக நாரதர், எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்ற நினைத்து விஷ்ணுவிடம் ஓடிப்போய் சிவன்-பார்வதி வேற்றுமையை இன்னும் நீடித்து வைப்போமென்று தூண்டில் போட்டார். விஷ்ணுவும் ஆம் என்றார்.

சிவனும் பார்வதியும் இன்னொரு தரம் சொக்கட்டான் ஆடவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. நாரதர் முதலிய தேவர்களின் சூழ்ச்சியால் இந்தப் போட்டியில் மாயவன் கண்ணனே பகடைகளாக மாறிப் பார்வதி ஆடும்போதெல்லாம் சிவனுக்குச் சார்பாகவே சரிந்து விழுந்தான்.

சக்தி கொஞ்ச நேரம் பொறுத்துப் பார்த்தாள். திசை மாறவில்லை. உடனே இதில் ஏதோ சூதுக்குள் சூது நடந்திருக்கிறதென்பதை உணர்ந்து, மகா கோபம் கொண்டு தனக்கு மாறாகச் சூழ்ச்சி செய்தவர்கள் எல்லோரையும் அழித்துக்கொட்டத் தீர்மானித்தாள்.

சக்தியின் கோபாக்கினி முன் யார்தான் நிற்க முடியும்?

நாரதர் உட்பட எல்லோரும் கிடு நடுக்கமுற்றனர்.

ஓடோடியும் சென்று உமையின் கால்களில் விழுந்து நமஸ்கரித்து நடந்த உண்மையை விளக்கி சிவனையும் பார்வதியையும் ஒன்று கூட்டிவைத்தனர்.

சக்தியின் மேன்மையைப் புலப்படுத்துவதற்கும், நொடியும் இணைபிரியா சிவசக்தி கூட்டுறவைப் பிரியச்செய்தது சூதாட்டமே என்பதை உலகோருக்கு எடுத்துக் காட்டுவதற்காகவுமே இக்கதைபுனையப்பட்டிருக்கவேண்டுமென்று கருதலாம்.

இதை மக்கள் வேறு விதமாகக் கருதி, தீபாவளிப் பண்டிகையில் சூதாட்டமும் ஒரு பகுதி என்று தவறாக நினைக்கிறார்கள்.

இதுபோலவே, நரகாசுரன் மாண்டபோது ஜனங்கள் எல்லோரும் ஸ்நானம் செய்து புத்தாடை அணிந்து மகாவிஷ்ணுவை வழிபட்டுக் கொண்டாடவேண்டுமென்று அவன் கேட்டுக்கொண்டதைத் தவறாக நினைத்து, அன்றைய தினம் கொண்டாட்டமே பிரதானமான கிருத்தியம் என்றெண்ணித் தீய வழிகளில் சென்று மதுவையும், மாமிசத்தையும் உண்டு கும்மாளம் அடிக்கிறார்கள், இன்றையவர்கள்.

தீபாவளி காட்டும் லட்சிய தத்துவங்கள் இன்று எப்படி எப்படித் திரிந்து முற்றும் வேறு விதமாகக் காட்சியளிக்கின்றன!

— வழிப்போக்கன்

# ஞான ஒளி பிறக்கும் ஆனந்தத் திருநாள்

— ஜீவா. கனகசுந்தரம் —

தீபங்களால் அலங்கரிக்கப்படுதல் தீபாவளி. அஞ்ஞான இருளை நீக்கி மெய்ஞ்ஞானமாகிய ஞான ஒளியை தோற்றுவிக்கும் தத்துவத்தைத் தீபாவளி நமக்குத் தெளிவு படுத்துகிறது.

இறைவனை மதிக்காது மமதை கொண்டிருந்த நரகாசுரன்,ஞான ஒளிபெற்ற போது இந்த உலகமெல்லாம் தான் பெற்ற ஒளி பெறவேண்டுமென்ற ஆசை மேலீட்டினால் இவ்வித தினத்தை மக்களெல்லாம் ஒளிமயமாகக் கொண்டாட வேண்டுமென்று இறைவனை வேண்டிக் கொண்டான்.

நரகாசுரன் பெற்றவரம் ஆண்டுதோறும் இல்லங்களிலெல்லாம் தீபாவளிப் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. துன்பம் மறந்த இன்ப நிலையை இத்தினத்தில் மக்கள் பெறுகிறார்கள். மாந்தர் உள்ளத்திலெல்லாம் இருளெனும் கவலை நீங்கி ஆனந்த ஒளிபெறும் வகையில் வருகிறது இப் பண்டிகை.

குழந்தைகளின் குதூகலம் பெற்றோரின் பூரிப்பு இதற்கெல்லாம் வழி அமைக்கும் தீபாவளித் திருநாள், இல்லங்களிலெல்லாம் தூய்மையையும் தெய்வீகத் தன்மையையும் நிலவச் செய்து நிலையான இன்பத்தை ஏற்படுத்துமாக.

## திரு. மாணிக்கவாசகர் லண்டன் செல்கிறார்

யாழ்ப்பாணம், செவ்

யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரான திரு. எஸ். வி, மாணிக்கவாசகர் உயர்கல்வி பெறும் பொருட்டு எதிர்வரும் பெப்ரவரிமாதம்லண்டன் செல்லவிருக்கிறார்.

உள்ளூராட்சி சம்பந்தமாக உயர்தர கல்வி பயில்வதற்காக அரசாங்க உபகாரச் சம்பளத்தில் இவர் இங்குசெல்வார். இவர் தற்பொழுது மாநகர சபையின் விசேஷ ஆணையாளரில் ஒருவராகவும்இருக்கிறார். [ந.நி]

## இப்போதுள்ள...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

சங்கத்தின் உபதலைவர் திரு.ஜே. எப். சிக்மறிங்கம் பேசுகையில், சங்கம் ஆசிரியர்களின் உரிமைக்காகத் தொடர்ந்து போராடிவரும் எனத் தெரிவித்தார். பின்வருவோர் கிளைச் சங்கத்தின் புதிய உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; திரு.ராஜசிங்கம், உபதலைவர்: ஜே. எப். சிக்மறிங்கம், காரியதரிசி: சி. பி. கதிரவேலாயுதபிள்ளை, பொருளாளர்: ஆர்.சி.வப்பிரகாசம். ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (ந.நி.)

# தீபாவளி பிறந்தது

( சரவணையூர் மணிசேகரன் )

பொழுது புலர்ந்தது! பொய்கையில் தாமரை
பூங்கொடி மலர்ந்தது! பூமியில் எங்கும்
அழகு சிரித்தது! அரிவையர் வாழ்த்த
ஆலயம் தன்னில் அமரனைத் தொழுதிட
புலவர்களின் நாவில் கவிதைகள் ஊறிட
புட்கள் எங்கும் கான மிசைத்திட
உழவும் பெருக! ஊனும் பெருக!
உதிப்பாய் இன்பத் தீபா வளியே!

அன்பும் பெருக! அறமும் பெருக!
இன்பம் பொங்க! ஏழை செல்வர்
என்ற பேதமும் எங்கும் நீங்க
எம்தமிழ் மாந்தர் சாதியெனும்
கொண்ட கொள்கையை மாற்றியுமே
கொடுமைகள் யாவும் அழித்திட்டு
இன்றே பாரினில் வரவேற்க
இன்பமாய் உதிப்பாய் தீபாவளியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலராநோய்க்கு ஒரு குடும்பமே பலி

## கெக்கிராவையில் சம்பவம்

சங்கானை, திங்கள்

கெக்கிராவை, சேனைபுரம் பகுதிகளில் காலரா, மலேரியா ஆகிய தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அனுராதபுரம் சுகாதாரப்பகுதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இதையொட்டி சௌக்கிய பரிசோதகர்கள், தாதிமார்கள் ஆகியோரது விடுமுறைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

குடி தண்ணீர் மற்றும் மல சல கூடங்கள் மூலம் நோய் பரவா வண்ணம்கிருமிநாசினிதெளித்தல் முதலிய வேலைகளில் உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வாரம் காலரா நோயினால் கெக்கிராவைப் பகுதியில் ஒரு குடும்பத்திலுள்ள ஆறு பேருமே மரணமானது குறிப்பிடத்தக்கது.

# ‘சமாதானம் நிலைக்க நிறுவப்பட்டசபை’

நெடுந்தீவு, திங்கள்

‘உலகில் மனிதன் சமாதானமாகவும். சுதந்திரமாகவும் வாழவேண்டுமென்ற காரணத்தால்தான் ஐக்கிய நாடுகள்சபையொன்று நிறுவப்பட்டது. முதலாவது உலகமகாயுத்தம் முடிவடைந்ததும் பலநாடுகள். சமாதானத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சர்வதேச சமாதான சங்கம் ஒன்றைநிறுவியது’.

1945-ம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த ஸ்தாபனம் இன்றுவரை பல துறைகளிலும் ஈடுபட்டு உலகமக்களுக்குப் பெருந் தொண்டாற்றி வருகிறது.

இவ்வாறு நெடுந்தீவு காரியாதிகாரி திரு. ரி. வேல்நம்பி நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபைத் தினக் கொண்டாட்டத்தில் தலைமைவகித்துப் பேசும் போது தெரிவித்தார்.

விழா ஆரம்பத்தில் தேசியக்கொடியை காரியாதிகாரி திரு. ரி. வேல்நம்பி ஏற்றிவைக்க தேசியகீதத்தை றோமன் கத்தோலிக்க ஆண் பாடசாலை மாணவர்கள் பாடினார்கள். பேச்சாளர்களாக திரு. க. த. ஞானப்பிரகாசம், திரு. எஸ். விநாயகமூர்த்தி, திரு. இரா. சின்னத்தம்பி, திரு. யே. அருளானந்தம், திருமதி. பி. எம். ஜே. அன்ரனி, திரு. இ. வேலுப்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

திருமலை

# உதைபந்து ரசிகர்களிடையே பலத்த ஏமாற்றம்

## மத்தியஸ்தர்-விளையாட்டு வீரர் லடாய்

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலை உதைபந்தாட்டக் கழகத்துக்கும், மத்தியஸ்தர்கள் கழகத்திறகும் இடையே பலத்த கருத்துவேற்றுமைகளும் மனக்கசப்பும்ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அர்ச் சூசையப்பர் கல்லூரி நூற்றாண்டு விழா வைபவங்களையொட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போட்டிகள் சிலவற்றிற்கு மத்தியஸ்தம் வகிக்கத் தவறியதென்ற குற்றச்சாட்டில் மத்தியஸ்தர் கழகத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ரி. ஏ. ஜாயா, கே. விஸ்வநாதன், டக்லஸ் ஜோசேப் ஆகிய மூவரையும் உடனடியாகத் தற்காலிகப் பதவி நீக்கம் செய்துள்ளதாக உதைபந்தாட்டக்கழகம் உத்தியோக தோரணையில் இவர்களுக்குக் கடிதம் அனுப்பியிருந்தது. இவ்விரண்டு கழகங்களும் ஒரு நோக்குடையதாக இருந்த போதும் தனித்தனியே தத்தம் நிர்வாகங்களைக் கவனித்து இயங்குவனவாகும். விளையாட்டுக்கழகம் மத்தியஸ்தர் ழகத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களை பதவியினின்றும் நீக்கவோ அன்றி அவர்களிடமிருந்து நேரடி விளக்கங்களைக் கோரவோ எவ்வித அதிகாரமும் இல்லையாம். இம்மூன்று மத்தியஸ்தர்களும் இப்பயமுறுத்தல் கடிதங்களை லட்சியம் செய்யாமல்தொடர்ந்து பல போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகித்துக்கொண்டிருக்கின்றனர். இந்த இரண்டு கழகங்களின் மோதல்களினால் திருக்கோணமலை உதைபந்தாட்ட விசிறிகளுக்குப் பெருத்த நஷ்டமும் ஏமாற்றமும் ஏற்படக்கூடும் என விளையாட்டு வட்டாரங்களில் கருதப்படுகின்றது. இந்தப் பிணக்குகளை மூன்று வாரங்களுக்குள் தீர்த்து முடித்துவிட வேண்டுமென்று தி. உ. கழகத்துக்கு கொ. உ. கழகம் விடுத்துள்ள வேண்டுகோளை தி. ம. கழகத்துக்கு விடுக்கப்பட்ட அதிபாரக் கட்டளை என ஒரு சில ஆங்கில பத்திரிகைகளில் வெளியான செய்தியை எதிர்த்து தி. ம. கழகத்தில தலைவரான திரு. ஆர். பழனியாண்டி கண்டித்தார்.

உதைபந்தாட்டக் கழகத்துக்குத் தமது முழு ஒத்துழைப்பையும் நல்குவதாக மத்தியஸ்தர் கழகம் கூறியிருந்தபோதிலும், உ. ப. கழகம் இதுவரை ம. கழகத்திடம் மத்தியஸ்தர்கள் தேவையெனக் கேட்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

### கண்டெடுத்த கூப்பன்கள்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் இரு கூப்பன் புத்தகங்கள் கண்டெடுக்கப்பட்டு ஜும்மா லேனைச் சேர்ந்த எம். மஜீத் என்பவரால் ‘ஈழநாடு’ காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிக் கூப்பன்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

---

### கோழிக்களவு

மல்லாவி, திங்கள்

வவனிக்குளத்தின் சில பகுதிகளில் தினமும் இரவு நேரங்களில் கோழிக் களவாடப்படுவதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

## ‘ஈழநாடு’ வார மலர் (1 - 11 - 67)

‘ஈழநாடு’ [1-11-67] வாரமலர் தீபாவளி மலராக, தீபாவளித் தினத்தன்று உங்கள் கைகளில் மலரும்.

O தீபாவளி தித்திக்குது (சிறுகதை)— பெரி சண்முகநாதன்.

O கண்ணன் இங்கே மடிகிருன் — சித்திரம் (த. இந்திரலிங்கம்).

O குழந்தைகளின் குதூகல விழா (பிரேம் ஷங்கர்ஜா).

O புதுப் பொலிவு பெற வரும் திருநாள்.

O கவிஞர் தீபாவளி இ. நாகராஜன் நிலவின் தாசன்.

O கே. பி. எச். (ஆசிரியர் ஹரன்) எழுதும் யாத்திரைக் கடிதங்கள்.

O காலம் மறக்காத கவிஞன்.

O சகோதரி நிவேதிதா பற்றிய கட்டுரை, உங்கள் பலன், குடும்பச் சுடர், கலை அரங்கம், சிறுவர் உலகம், உலக மேடை, வாரசாரம் ஆகிய வழமையான அம்சங்களும் இந்த மலரில் வெளிவருகின்றன.

## ஜப்பான் சென்ருர்

பண்டத்தரிப்பு, திங்கள்

கொழும்பு பிரபல வர்த்தக ஸ்தாபனமொன்றில் ‘டிருப்ஸ்மென்’ உத்தியோகஸ்தராகக் கடமையாற்றிய திரு. எஸ். மரியநியூமன் விலானமூலம் யப்பான் பயணமானர். இவர்பிளாஸ்டிக் பொருளமைப்பில் உயர் பயிற்சி பெறவே அங்கு சென்றுள்ளார்.

ஜப்பானின் பொறியியல் நிபுணரின்கீழ் இவர் டோக்சியோ, யொக்கோகமா, ஓசாக்கா நகரங்களின் பிரதான தொழிற்சாலைகளில் ஒருவருடப் பயிற்சி பெற்ற பின் திரும்புவார். மேற்படி ஸ்தாபனத்தின் உபகாரச் சம்பளம் பெற்றுச் செல்லும் 21வயதான மரியநியூமன் இளவாலை என்றியரசர் கல்லூரி ஆசிரியர் வித்துவான் சந்தியாப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வரும் இளவாலை என்றியரசர் கல்லூரிப் பழைய மாணவருமாவார்.

### குளங்கள் திருத்த ரூ 80 லட்சம்

கொழும்பு, திங்கள்

சமீபத்திய பெருமழையினாலும் புயலினாலும் சேதப்படுத்தப்பட்ட குளங்களைத் திருத்துவதற்கு உணவு விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டா 80 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நெல்விதைகளை இலவசமாக வழங்குமாறும் அமைச்சர் விவசாய இலாகாவுக்கு அறிவித்தல் செய்துள்ளார். விதைநெல் வழங்கமுடியாத பட்சத்தில் ரொக்கப்பணம் உதவியாக வழங்குமாறு அவர் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

---

[5ம் கலத் தொடர்ச்சி]

செல்லப்பன் தமக்கு ஏன் தேநீர் தரவில்லையென்று கேட்டு எனக்கு அடித்தார். கோவிந்தன் எனது றேடியோவை உடைத்தார். நான் குளறியபோது பொலிஸார் இவர்களைக் கைதுசெய்தனர்.

சிவகுரு பாக்கியம், கணபதி செல்லப்பன் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

‘வடக்கு, கிழக்கு மாகாணத்தவர்

# குறைந்த விலையில் அரிசிபெறவழிசெய்க’

காங்கேசன்துறை, திங்.

மற்ற மாகாணங்களில்விற்பனவு இலாகாவினர் குறைந்தவிலையில் மக்களுக்குஅரிசி விற்பனவு செய்து வருவது போல் வடகிழக்கு மாகாணங்களிலும் குறைந்த விலையில் மக்களுக்கு அரிசிகிடைக்கச்செய்யவிற்பனவு இலாகா நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் மயிலிட்டிகிராமசபையில் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நெல், அரிசி ஆகிய உணவுப் பொருள்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குக் கொண்டுவருவதைத் தடை செய்யும் நடவடிக்கைளைதயும் செய்யவேண்டாமெனக் கோரும் தீர்மானமொன்றை பிரதமருக்குஅனுப்பிவைப்பதெனவும் சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

மயிலிட்டி கிராமசபைஎல்லைக்குள் பெற்றோல் ஆராய்ச்சி நடத்துமாறு பெட்றோலியம் கூட்டுத்தாபனத்தைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணையை திரு. இ. இராஜதுரை பிரேரிக்க திரு. என். வேலுப்பிள்ளை அனுவதித்தார். இப்பிரேரணையும் ஏகமனதாக நிறைவேறியது.

கிராமசபைத் தலைவர் திரு. எஸ். அருணுசலம் தலைமையில் சபைக் கூட்டம் நடைபெற்றது.

# வடபகுதி வித்தியாதிபதி விரைவில் ஒய்வுபெறுவார்

யாழ்ப்பாணம், செவ்.

வடபகுதி வித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் தமது பதவியிலிருந்து ஒய்வுபெறவிருப்பதாகத் தெரியவருகிறது.

திருமதி நவரத்தினம், பதவியிலிருந்து ஒய்வுபெறுவதற்கு முன்னதாக அடுத்த மாத முதல் வாரத்திலிருந்து லீவில் செல்லவிருப்பதாகவும் ஜனவரி மாதம்வரை திரு. ஞானசேகரம் தற்காலிகமாக வித்தியாதிபதியாகக் கடமையாற்றுவாரென்றும் ஜனவரிமாதத்தின் பின்னர் திரு. சங்கரலிங்கம் வித்தியாதிபதியாகக் கடமையாற்றுவாரென்றும் அறியப்படுகிறது.

கொடிகாமம்

# தேநீர்க் கடை வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், செவ்.

தேநீர்க்கடையில் தேநீர் கொடுக்க மறுத்ததாக கொடிகாமம்தேநீர்க்கடைச் சொந்தக்காரரர் ஒருவர் மீது சாவகச்சேரிப் பொலிஸாரால் குற்றம்சாட்டி தொடரப்பட்ட வழக்கு நேற்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது மாஜிஸ்திரேட் எதிரியை விடுதலைசெய்தார்.

இவ்வருடம் ஜுலை 31-ம் திகதி கொடிகாமத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தையா என்பவர் போக்கட்டியைச் சேர்ந்த கந்தன் கந்தையா என்பவருக்கு தேநீர் கொடுக்க மறுத்ததாக சாவகச்சேரி பொலிஸாரால் இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது. வழக்கை சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஆர். இ. ஜெயதிலகா நடத்தினர்.

எதிரி சார்பில் அட்வக்கேட் திரு. எஸ். என். ராஜதுரை, புறக்டர் திரு. கே. ஞானசந்திரனின் அனுசரணையுடன் ஆஜரானுர்.

விசாரணையின்போது கந்தன் கந்தையா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவம் நடந்ததினம் எதிரியின் தேநீர்க்கடைக்குச் சென்று வெறும் தேநீர் கேட்டேன். எதிரி கத்தியைக்காட்டி என்னைப் பயமுறுத்தினர். இந்த சம்பவத்தின்பின் பொலிஸார் என்னைக் கைதுசெய்தனர்

கடைச்சொந்தக்காரரான சின்னத்தம்பி கந்தையா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

நான் தேநீர்க்கடையை 7 வருட காலமாக நடத்தி வருகின்றேன். எனது கடைக்கு கந்தன் கந்தையா வருவதில்லை சம்பவம்நடந்த அன்றும் வரவில்லை. அன்று சோமையன் செல்லப்பன், கோவிந்தன் ஆகியோர் வந்து தேநீர்தரும்படி கேட்டனர். அதற்குமுன் சிவகுருவும் கணபதிப்பிள்ளையும் கடையின் வெளியே காத்திருந்தனர். நான் சிவகுருவுக்குத் தேநீர் போட்டுக் கொடுத்தேன்.

செல்லப்பனிடமும் கோவிந்தனிடமும் தேநீர்தருவதாகக்கூறி வாங்கிலிலிருக்குமாறு கேட்டுக்கொண்டேன்.

[3-ம் கலம் பார்க்க]

# ‘மேகநோய் தேசீய பிரச்னையாகக்கூடாது’

புன்னலைக்கட்டுவன், திங்

“7 வயதுப் பெண் குழந்தைகளுக்கே மேகநோய் ஏற்படும் இன்றைய சூழ்நிலையில், இந்நோய் மற்றைய பிரச்னைகளை மங்கச்செய்யக்கூடிய தேசியப் பிரச்னையாக உருவாகக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது இப்பிரச்னை பூதாகாரமாக உருவெடுக்காது தடுக்கவேண்டியது மிகமிக அவசியம்” என்று டாக்டர் திரு. பி. சிவசோதி பிரயோக போஷணைத் திட்டப் பகுதியினரின் ஆதரவின்கீழ் நடந்த கூட்டமொன்றில் கூறினர்.

திரு. எம். எஸ். தனபாலசிங்கத்தின் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் டாக்டர் சிவசோதி தொடர்ந்து பேசுகையில், மேகநோய் கண்டதும்வெட்கம், மானம் இவற்றை அலட்சியம் செய்து சிகிச்சை பெறவேண்டியது அவசியம். இந்நோய்க்குத் தகுந்த சிகிச்சை பெருதவர்கள் தங்கள் சந்ததியினருக்கே தீராத கெடுதி செய்தவர்களாவார்கள். இவர்கள் இந்நாட்டின் வரலாற்றில்துரோகிகள் என்று இடம்பெற நேரிடுமென்றும் கூறினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்.

AGENTS

ரோயல் டிஸ்பென்ஸறி

PHONE 397 JAFFNA


# வான் மூலம் மரக்கறி விற்பனை

யாழ்ப்பாணம், செவ். மரக்கறிவகைகளை வான் மூலம் கொண்டுசென்று விற்பனை செய்யும் திட்டத்தை யாழ்ப்பாணம் அரசாங்க விற்பனை இலாகாவினர் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் விரிவுபடுத்தவுள்ளனர். இதனால் அதிகமான ரூபா வருமானமுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இம்முறை விரிவுபடுத்தப்படவுள்ளது.

கடந்த வாரம் முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நல்லூரில் மரக்கறிகளை விற்பனை செய்யத் தொடங்கியுள்ளனர். முதல் நாளன்றே சுமார் 400 ரூபாவுக்கு அங்கு வியாபாரம் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இம்முறை தற்போது காரைநகர், கொட்டடி, வண்ணார்பண்ணை, மெயின் வீதி ஆகிய இடங்களிலும் நடைமுறையிலிருந்து வருகின்றது. வான்மூலம் நடைபெறும் விற்பனையால் 1600 ரூபாவுக்கான மரக்கறி வியாபாரம் நடைபெறுவதாகத் தெரிகின்றது.

இந்த விற்பனை முறை,

[7-ம் பக்கம் பார்க்க]

## விவசாயத்தில் மாணவர் முன்னேற்றம்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலை மாணவர் திறமையாகக் களைபிடுங்கி விடுவதாகத் தெரிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து இப்பகுதியிலுள்ள விவசாயிகள் இவர்களைத் தமது வயல்களில் களைபிடுங்க வருமாறு அழைத்துள்ளதாகத் தெரிகிறது. சுழிபுரம் பயிர்ச் செய்கைக் குழுவினரும் மாணவரின் திறமையைப் பாராட்டியுள்ளனர்.





அனுபவமுள்ள வைத்தியரின்
மேற்பார்வையில்
சித்த வைத்திய மருந்துகள்
ஆயுர்வேத மருந்துகள்
மருந்துச் சரக்குகள்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்
மருந்துக்கடை
[ புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை ]
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

மலிவு விற்பனை
தீபாவளியை முன்னிட்டு
குறுக்ஸ் B. 2 லென்ஸ்
சன் கிளாஸ்
மலிவு விலை ரூபா 27-50 சதம்
ஆண்கள் பெண்களுக்கு
பல்கட்டும் கண்ணாடி வேலைகளா
10 வீதம் கழிவு
25-10-67 தொடக்கம் 31-12-67 வரை
மூக்கு கண்ணாடிகள் லேட்டஸ் பிரேம்களில்
P. I. பெர்ணன்டோ
பல்கட்டுபவர் கண் பரிசோதகர்.
51 A. பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## சங்கானைப் பட்டினசபை கேள்விப்பத்திர விளம்பரம்

14-11-67-ம் திகதி காலை 10-00 மணிவரை கீழே சொல்லப்பட்ட வேலைகளுக்கான சீல்வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 5/-ம் கேள்விப்பத்திர வைப்புப் பணமாக ரூபா 50/.ம் கட்டியதன் பேரில் வழங்கப்படுகின்ற கேள்விப் பத்திரத்திலேயே கேள்விகள் கேட்கப்படவேண்டும். கேள்விப்பத்திரப்பணம் ரூபா 5/- திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. 13-11-67-ம் திகதி காலை 10-00 மணிவரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்,

மேற்கொண்டு விபரங்களை வேலை நேரங்களில் சங்கானைப்பட்டினசபைக்காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

வேலைகள்

1. சேச் ரேட்டிற்குஇரண்டாம்முறை தார் ஊற்றுதல்.
2. பஸ் தரிப்பு நிலையத்திற்கு இரண்டாம் முறை தார் ஊற்றுதல்.

ஒப்பம்!
சி. க. திருச்சிற்றம்பலம்
தலைவர்,
பட்டின சபை, சங்கானை.
பட்டினசபைக்காரியாலயம்,
சங்கானை. 29-10 67. 304

## சுன்னுகம் பட்டணசபை சோலைவரி

1967-ம் ஆண்டு 3-ம் கந்தாயத்திற்குரிய சோலைவரியை பட்டணசபைக் கந்தோரில் அல்லது வரி அறவிடுபவரிடம் 10-11-67-ல் அல்லது அதற்குமுன் செலுத்திப் பற்றுசீட்டுப் பெற்றுக் கொள்ளவும். குறிப்பிட்ட திகதிக்குள் வரி செலுத்தத் தவறின் கூடுதலாக 10 வீத விருந்துப்பணமும் வரிப் பணத்துடன் சேர்த்து அறவிடப்படும் என்பதை சுன்ளுகம் பட்டணசபை வரியிறுப்போருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பொ. நாகலிங்கம்,
தலைவர்,
பட்டணசபை, சுன்ளுகம்.
பட்டணசபை அலுவலகம்,
சுன்ளுகம், 29-10-1967.
305

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 31-10-67

[செய்திகள்:-காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 தேர்ந்தஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 தொழிலாளர் நிகழ்ச்சி, 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 குரல்வகை, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பா வளம், 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 சித்திரம், 10-15 தேர்ந்தஇசை.

## தீவுப்பகுதியில் உதைபந்தாட்டக்கழகம்

யாழ்ப்பாணம், செவ்.

தீவுப்பகுதி இளைஞர்களைக் கொண்ட உதைபந்தாட்ட விளையாட்டுக் கழகமொன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையைச் சேர்ந்த திரு. கே. ஜதுகுலசிங்கம் இதன் போதனுசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார். தீவுப்பகுதியைச் சேர்ந்த எவரும் இக் கழகத்தில் அங்கத்துவம் வகிக்கலாமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. [ந.நி.]

## வேலணை — யாழ் மத்தி மோதல்

யாழ்ப்பாணம், செவ்.

வேலணை சென்ட்ரல் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 2ம், 3ம் பிரிவுகளுக்கிடையே யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் 2-ம் பிரிவில் வேலணைக்கோஷ்டி 2—1 கோல்களால் யாழ். மத்திய கல்லூரியைத் தோற்கடித்தது.

3-ம் பிரிவுப் போட்டியில் யாழ் மத்தியகல்லூரி 3—1 கோல்களால் வேலணைக் கோஷ்டியை வென்றது. [வி.நி.]

உதை பந்தாட்டம்

## இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் பாடசாலை உதைப தாட்டச் சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்லூரிகளுக்கிடையேயான முதலாம்பிரிவு, உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்றுமாலை 3-15மணியளவில 'பி' டிவிஷனில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து சோப்பாய் கிறிஸ்றியன் கல்லூரியும் 'ஏ' டிவிஷனில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரியும் பெரும் மோதல்களில் ஈடுபட விருகின்றன. [வி.நி]

## மாதகல் வெற்றி

யாழ்ப்பாணம், செவ்

மாதகல் விளையாட்டுக் கழகத்திற்கும் வடபகுதி இராணுவக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதை பந்தாட்டப் போட்டியில் மாதகல் கோஷ்டி 3-1 கோல்களால் இராணுவவீரர்களைத் தோற்கடித்தனர்.

மாதகல் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இம்மோதலில் இடைவேளைக்கு முன்னர் மாதகல் இரு கோல்களும் பின்னர் ஒரு கோலும் பெற்றது. இராணுவ வீரர்கள் ஒரு கோலைப் போட்டனர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. எல், ஏ. ஜோசப் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். [வி.நி]

## இருபோட்டிகளிலும் வெற்றி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் கொலீஜ் ஒவ் எடியூக்கேஷன் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணம் கில்னர் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் கொலீஜ் ஒவ் எடியூக்கேஷன் கோஷ்டி 5—0 கோல்களால் வெற்றிபெற்றது. இப்போட்டி வைத்தீஸ்வர வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

கொலீஜ் ஒவ் எடியூக்கேஷன் கோஷ்டியும் வட்டுக்கோட்டை இளம் நட்சத்திரக் கோஷ்டியும் கலந்துகொண்ட மற்றொரு போட்டியில் கொலீஜ் ஒவ் எடியூக்கேஷன் கோஷ்டி 2—1 கோல்களால் வென்றது.

## தீவுப்பகுதியில் ஒருபாடசாலை

யாழ்ப்பாணம், செவ்.

கடந்த வருடம்டிசம்பரில் க.பொ.த.சாதாரண தரத் தேர்வில் விஞ்ஞான பாடங்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 74 பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் தோற்றினர். அதில் 13 பாடசாலைகளில் பௌதிக பாடத்தில் 50 சத வீதத்திற்குமதிக மாணவர்கள் சித்தி பெற்றனர். இந்த 13 பாடசாலைகளிலும், தீவுப்பகுதியில் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயம் மாத்திரமே அச் சிறப்பைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. பின் தங்கிய நிலையிலுள்ள இக்கிராமப் பாடசாலையில் அவ்வருட நடுப்பகுதியில் அங்கு பௌதிகம் கற்பித்த பட்டதாரி ஆசிரியர், பதிலாசிரியர் அனுப்பப்படாமல் மாற்றப் பட்ட போதும், பல கல்லூரிகளைவிடச் சிறப்பான முறையில் பெற்ற இவ் வெற்றிக்காக அப்பாடசாலை தீவுப்பகுதியில் பெரிதும் பாராட்டப்படுகிறது.

## உரம் தட்டுப்பாடு விரைவில் நீங்கும்

யாழ்ப்பாணம், செவ்,

வடபகுதியில் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் உரத்தட்டுப்பாட்டினுல் பெரிதும் சங்கடப்படுகின்றனர்.

வடபகுதியிலுள்ள ப.நோ. கூ. சங்கங்களில் கிடைக்கும் உரத்தை தமது தேவைக்கு மிஞ்சி வாங்கி இருப்பில் வைக்கவேண்டாமென வடபகுதி விவசாயிகளை யாழ்ப்பாண விவசாயப்பகுதி அதிபர் திரு. என். ஜெயசீலன் கேட்டுள்ளார்.

பயிர்ச்செய்கைக்குரிய உரத்திற்குவடபகுதியில்மட்டுமல்ல இலங்கை முழுவதிலும் தற்சமயம் பெருமதட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இத்தட்டுப்பாடு இன்னும் இரு வாரங்களில் உரக் கப்பல்கள் வந்துசேர்ந்தவுடன் நீக்கப்படுமெனவும் தெரியவருகிறது [வி.நி]

## கடும் மழையால் நெற்பயிர்சேதம்

கொழும்பு, திங்கள்

அண்மையில் பெய்த பெருமழை காரணமாகவும் வீசிய புயல் காரணமாகவும் 55 ஆயிரம் ஏக்கரில் விளைவிக்கப்பட்ட நெற்பயிர் சேதப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 97 நீர்ப்பாசனக் குளங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. தென்மாகாணத்திலேயே அதிக சேதம் ஏற்பட்டுள்ளதாகக்கணிக்கப்பட்டுள்ளது.

## வான் மூலம் . . .

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ்ப்பாணக் குடாநாடெங்கும் விரிவுபடுத்தினுல் தீவுப்பகுதி மக்களும், கிராமப்புற மக்களும் மலிவான விலையில் மரக்கறிகளை வாங்க முடியுமென்றும், இதனுல் விற்பனை இலாகாவுக்கும் மேலும் அதிகமான விற்பனை நடைபெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. [ந. நி.]

## கோடீஸ்வரன் வழக்கு

கொம்பனித்தெரு, திங்கள்

கோடீஸ்வரன் வழக்கு பிரிவுக் கவுன்ஸிலுக்கு எடுத்துச் சென்று வாதாடுவதற்கு சுமார் ஒன்றரை லட்சம் ரூபா தேவைப்படுவதாகவும் அந்தச் செலவுதொகைக்கு அரசாங்க ஊழியர்களும், பொதுமக்களும் வர்த்தகப் பிரமுகர்களும் தங்களால் இயன்ற பண உதவியைச் செய்து வருவதாகவும் அறியப்படுகிறது. அத்துடன் பரீட்சைப் பகுதியைச் சேர்ந்த ஊழியர்கள் தங்களின் அரைமாதச் சம்பளத்தை கோடீஸ்வரன் வழக்குச் செலவுக்குக் கொடுக்கச் சம்மதம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

## பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணப் பகுதியில் நடைபெற்ற சைக்கிள் களவுகள் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட விளக்க மறியலில் இருந்த அனைவரும் தலா 300 ரூபா பிணையில் செல்ல யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு எம். ஜமீல் நேற்று அனுமதித்தார். இது சம்பந்தமாக 8பேர் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். [ந.நி]

## வரி விளம்பரம்

### தேவை

நிர்வாகப் பொறுப்பாளர்

டீசல் விற்பனை நிலையத்திற்கு நிர்வாகப் பொறுப்பாளர் தேவை. பிணை ரூபா 1000/- வேதனம் ரூபா 100/- வருடாந்த சம்பள உயர்வும் உண்டு. விபரங்கட்கு: டி. ஏ பிள்ளை, லங்கா டீசல் டிப்போ. 1, பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். 2561

இளைஞர்கள்:

எங்கள் சரமான தேயிலையை வீடுகளுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு கல்வியறிவுள்ள இளைஞர்கள் தேவை. ஊக்கமும் வல்லமையும் உள்ளவர்கள் நல்ல வருமானத்தை எதிர்பார்க்கலாம். நேரில் வரவும். நந்தி இன்டஸ்ரீஸ் அன்ட் ஏஜென்ஸீஸ் லிமிடெட், 20, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 2293


அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
ஆ. அப்பையா அன் கோ.,
தலைமை ஸ்தாபனம்: 82, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்
கிளை ஸ்தாபனம்: 54, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 506

வாடிக்கைக்காரர்களுக்கும் அன்பர்களுக்கும் எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
V.K. இராசரத்தினம்
(றேடியோ விற்பனையாளர்களும் திருத்துபவர்களும்)
11/5, ஸ்ரான்லி றேட் — யாழ்ப்பாணம்.

எல்லோருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!
உயர்ந்தரக ஜவுளிவகைகளைப் பெற்று உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய மறவாதீர்கள்
கணேசானந்தாஸ்
(முட்டாசுக் கடைச்சந்தி)
208. கே. கே. எஸ். றேட் — யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
"றேடியோனிக்ஸ்"
[RADIONICS]
[றேடியோ திருத்துவதில் நிபுணத்துவம் பெற்றவர்கள்]
18, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!
பாரத் ஸ்ருடியோ
கஸ்தூரியார் வீதி,
போன்: 252
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவில் மூன்று படகுகளும் பழுது

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவு சேவையில் ஈடுபட்டிருந்த இராஜேஸ்வரி, எலாரு, அலையரசி, சில்வஸ்பிறேயீ ஆகிய நான்கு மோட்டார் படகுகளில் சில்வஸ்பிறேயைத் தவிர்ந்த ஏனைய மூன்று மோட்டார் படகுகளும் தற்போது யாவிக்கப்படுவதில்லையெனத் தெரிகிறது. இச்சேவையை நடாத்திவரும் பொது மராமத்து இலாகா அனுபவம் வாய்ந்த சிப்பந்திகளை இச்சேவையில் ஈடுபடுத்தாதிருப்பதையிட்டு நெடுந்தீவு பிரயாணிகள் பெருங்கவலையும் அதிருப்தியும் அடைந்துள்ளார்கள்.

பூன்வாட் இல்லத்திலிருந்து

# பணியாளரான இலங்கையர் வெளியே செல்ல முடியாதாம்

கொழும்பு, திங்கள்

கொழும்பில் பர்மியதூதர் பூன்வாட் வசித்த இல்லத்தில் பணியாளர்களாகச் சேவை செய்யும் இலங்கையர் வெளியே செல்வதற்கு இதுவரை அனுமதிக்கப்படவில்லையாம்.

திருமதி பூன்வாட்டின் மரணத்திற்குப் பின்னர் அங்கு வேலைசெய்யும் இலங்கையர் எவரும் வெளியேசெல்ல அனுமதிக்கப்படவில்லையாம்.

அங்குள்ள பணியாளர் ஒருவரின் உறவினர் 'டெலிபோனில்' அவருடன் தொடர்புகொண்டு விசாரித்தபோது 'எங்களை வெளியே செல்லக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கின்றனர். நாங்கள் இங்கே சிறைவைக்கப்பட்டிருக்கிறோம்' என்று கூறினாராம்.

அங்கு வேலைசெய்யும் இலங்கையர் எவரும் வெளியேவந்தால் திருமதி பூன்வாட்டின் மரணம் பற்றி இலங்கைப் பொலிசார் விசாரணைசெய்யக்கூடுமென அஞ்சப்படுவதுதான் அவர்கள் வெளியேசெல்ல அனுமதிக்கப்படவில்லையெனத் தெரிகிறது.

பர்மியத் தூதர் திரு. பூன்வாட் பர்மாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுவிட்டார். அவரது பிள்ளைகளும் விரைவில் பர்மா செல்லக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது ஆயினும் அவர்கள் இன்னும் இங்கிருந்துசெல்லவில்லை.

## சோவியத்......

1- பக்கத்தொடர்ச்சி]

கள் சிலவற்றிற்கு இன்றையதினம் காலையில் விஜயம் செய்து இப் பிரதிநிதிகள் பார்வையிடுவர். மாலை 2 மணிக்கு வலி. வடக்கு காரியாதிகாரி பிரிவிலுள்ள குப்பிளான், குரும்பசிட்டி, ஊரங்குனை, வீமன்காமம்போன்ற இடங்களிலுள்ள சனசமூகநிலையங்களுக்குச் செல்லுவர். உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் மாலை 5 மணிக்கு கலாச்சாரத் தூதுகோஷ்டியினருக்கு தேனீர் விருந்துபசாரம் அளித்துக் கௌரவிப்பார். இவ் விருந்துபசாரத்தில் கலந்துகொள்ள உள்ளூராட்சிமன்றங்களின் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், அரசாங்க அதிகாரிகள் பலரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

உடுவில் கிராமசபை திறந்தவெளியரங்கில் மாலை 6-30 மணிக்கு நடைபெறும் அக்டோபர் புரட்சி ஞாபகார்த்தவிழாவில் இப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு உரைநிகழ்த்துவர். இலங்கை—சோவியத் நட்புறவுசங்க யாழ், பிரதேசக் கிளையின் ஆதரவில் நிகழும் இவ்விழாவில் தமிழ் எம். பி. க்கள் பலரும் கலந்துகொள்வர். தமிழ் கலாச்சாரங்களை விளக்கும் நடனநாட்டிய கலைநிகழ்சிகளும், நாதஸ்தர இசை நிகழ்ச்சிகளும் பிரதிநிதிகள் முன்னிலையில் இடம் பெறும். மறுதினம் காலையில் இவர்கள் கொழும்பு திரும்புவர்.

உடுவில் எம். பி.யும் இலங்கை—சோவியத் நட்புறவுச்சங்கத் தலைவருமான திரு.வி. தர்மலிங்கம் கலாச்சாரப்பிரதிநிதிகளின் விஜயத்திற்கான ஏற்பாடுகளைக் கவனித்துவருகின்றார்.

## இரத்தினக......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வளவு பெறுமதியான இரத்தினக்கற்களை இந்தியாவுக்குக்கடத்திச்செல்ல முயன்றபோது சுங்கப் பகுதியினர் தடுத்து நிறுத்தி அவற்றைப் பறிமுதல் செய்ததோடு சுங்கப் பகுதி அதிகாரிமுன் ஆஜர் செய்தனர். இவருக்கு ரூபா 6000 அபராதம் விதிக்கப்பட்டது.

## 12 ஆயிரம்....

1-ம் பக்கத் தொடர்ச்சி

தின் அடியிலிருந்து வெளியேறும் இரண்டு இருத்தல் மண்ணும் சிறிய கற்களும் எடுக்கப்பட்டு இவை பிரான்ஸ்நாட்டுக்குஅனுப்பி வைக்கப்படுகிறது. இது சம்பந்தமான இரகசியப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு மட்டும் தனியாக ஒரு'வான்'இருக்கிறது.

மேற்குறிப்பிட்ட மூன்று இடங்களிலும் ஊறும் பெட்ரோல் தென் இந்தியாவிலிருந்து வரலாமெனப் பிரெஞ்சு நிபுணர்கள் சந்தேகிப்பதாகவும் தெரிகிறது. இதனைத் தொடர்ந்து இந்த நிபுணர்கள் கடலிலும் ஆராய்ச்சி நடாத்த ஆரம்பித்துள்ளனர்.

இலங்கை கடற்படை உதவியுடன் கடற்படைக் கப்பலான ''கொறவக்க'' இயந்திரப்படகான'எலாரு' ஆகியவற்றின் மூலம் கடந்த சில நாட்களாக ஆராய்ச்சி நடாத்திவந்துள்ள பிரெஞ்சு நிபுணர்களை கடல் காற்று நிலமை சரியில்லாததால் கடற்படையினர் கப்பலில் செல்வதற்கு இப்போது தடை விதித்துள்ளனர். இதைத் தொடர்ந்து கடலில் ஆராய்ச்சி நடத்துவது அடுத்த மாதத்திற்குப் பின் போடப்பட்டுள்ளது.

### மன்னாரில் ஆராய்ச்சி

பிரெஞ்சு நிபுணர்களின் ஆராய்ச்சி அடுத்த வாரம் மன்னார்ப் பகுதியில் நடைபெறவிருக்கிறது. இதுவரையில் பிரெஞ்சு நிபுணர்கள் வடபகுதியில் தொண்டமானாறு, வல்லை, தாளையடி, செம்பியன்பற்று, நெடுங்கேணி, துன்னாலை, வளலாய், கரணவாய், அச்சுவேலி, மணற்காடு, மாதகல், குடாரப்பு, உடுப்பிட்டி ஆகிய இடங்களில் நடாத்தியுள்ளார்கள்.

பிரெஞ்சு நிபுணர்களின் திரு.பிறயோன் தலைமை நிபுணராகவும், திரு. மொறிஸ் பொறியியலாளராகவும், திரு.ஒட்டா அளவை நிபுணராகவும், திரு. ஒப்சேவர் லராயர் ரெக்னீஷியன் நிபுணராகவும் கடமையாற்றி வருகின்றனர்.

தலைவரான திரு. பிறயோன் பிரதமர் திரு.டட்லி சேனநாயக்காவுடன் வடபகுதியில் நடைபெற்று வரும் பெட்றோல் எண்ணெய்வள ஆராய்ச்சிசம்பந்தமாக தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

அண்மையில் பிரெஞ்சுநிபுணர் ஒருவர் பிரான்சிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கு ஜெட் விமான மூலம் வந்து உடனடியாக அன்றே இங்கிருந்து திரும்பியதாகவும் அறிய வருகிறது.

அடுத்த மார்ச் மாதத்திற்கிடையில் பிரெஞ்சு நிபுணர்கள் வடபகுதியில் நடத்திய பெட்றோல் எண்ணெய்வள ஆராய்ச்சி பற்றி இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளனர்.

கீரிமலையில் முகாம்அமைத்துள்ள இந்த பிரெஞ்சு நிபுணர்கள், மண்டைதீவில் இப்போது பெட்றோல் ஆராய்ச்சியை நடத்துவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

உதைபந்தாட்டம்:

# நேற்றைய மோதல்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நேற்று மாலை நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் 'ஏ' பிரிவு மோதலில் கொக்குவில் இந்துக் கல்லூரி தெல்லிப்பளை யூனியன் கல்லூரியை 3—0 கோல்களால் வெற்றியீட்டியது.

'பி' பிரிவில் சாவகச்சேரி றிபேக் கல்லூரிக்கும் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் இடையே நடைபெற்ற மோதலில் இரு கோஷ்டியும் தலா 1—1 கோல்கள் பெற்று வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்தனர். இப் போட்டிகளுக்கு திரு. எஸ். தேவபாலன், திரு. சற். சிங்கராயர் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினார்கள்.

## சலூன் வழக்கு இன்று தீர்ப்பு

கொடிகாமம், செவ்.

கொடிகாமம் சிகை அலங்கரிப்பு நிலைய வழக்கு தீர்ப்பு இன்று காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசாவினால் வழங்கப்படும்.


தேவை

மெக்கானிக்கர்கள் (Mechanics)

எங்கள் தோட்டங்களிலும்வேலை நிலையங்களிலும் வேலை செய்வதற்கு

தண்ணீர்ப்பம்புகள், ட்ராக்டர்கள், மோட்டார்வாகனங்கள் ஆகியவை திருத்துவதிலும் பராமரிப்பதிலும் நன்கு தேர்ச்சிபெற்ற மெக்கானிக்கர்கள் (Mechanics) தேவை. கல்வியறிவுள்ள இளைஞர்களுக்கு முதலிடம் அளிக்கப்படும். கடிதமூலம் விண்ணப்பிக்கவும்:— நந்தி இன்டஸ்றீஸ் அன்ட் ஏஜென்ஸீஸ் லிமிட்டெட், ''ரோறஸ் ரீ ஹவுஸ்'' 20, ஸ்ரான்லிரோட், யாழ்ப்பாணம்.

நியூ காலிங்கன்
[இ ஹவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி நடித்த
எங்க வீட்டுப் பிள்ளை

REGAL JAFFNA
Daily at
4-40 7-00 9-45 p. m.
Robert Vaughn - Elke Sommer
in
M G M's
THE VENETIAN AFFAIR
(Adults Only)

தீபாவளி வெளியீடு!
மனோகரா — ராணி
யாழ்ப்பாணம்
ராணியில் பிற்பகல் 2-15, இரவு 6-15, 9-45 மணி
மனோகராவில் பிற்பகல் 2-45 இரவு 6-45, 10-00 மணி
ஜெய்சங்கர், ஆதித்தன், தங்கவேலு, ''வெண்ணிறஆடை'' மூர்த்தி, வாணிஸ்ரீ, விஜயலலிதா, பண்டரிபாய், பேபி கௌசல்யா, குமாரி ராதா
நடித்த
காதல் படுத்தும் பாடு
பின்னணி: டி. எம். சௌந்தரராஜன், பி. சுசீலா, எஸ். ஜானகி.

இப்பொழுது நடைபெறுகிறது
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி.ப. 2-30, மாலை 6-20, இரவு 9-30 மணிக்கு
பிளாஸா [வெள்ளவத்தை]
கெப்பிட்டல் [கொழும்பு]
மைலன் [கொட்டாஞ்சேனை]
விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
மற்றும் நாலு திரைகளில்
எம். ஜி. ஆரும், ஜெமினி கணேசனும்.
முதல்முறையாக சேர்ந்து நடித்து வெற்றி கண்ட இன்பச் சித்திரம்!
கடமைக்கும் பாசத்திற்கும் நடுவே சிக்கித்தவிக்கும் ஒரு பொலிஸ் அதிகாரியின் உணர்ச்சியூட்டும் சித்திரம்! 100 நாட்களுக்கு மேல் ஓடி தென்னகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற சித்திரம்.
மற்றும்



ஜெயலலிதா, ஜெய்ந்தி, நம்பியார், அசோகன், நாகேஷ், ஸ்ரீராம், மனோரமா, பி. கே. சரஸ்வதி
நடித்த
தேவர் பிலிம்ஸ்
முகராசி
டைரக்ஷன் எம். ஏ. திருமுகம்
இசை: திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன்

6-வது வாரம்
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
லக்ஷ்மி [கரவெட்டி]
ஜெய்சங்கர் — ஜமுனா — நாகேஷ் — பேபி பத்மினி
நடித்த
ஏ. வி. எம்மின் ஜனாதிபதி பரிசுபெற்ற
குழந்தையும் தெய்வமும்


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org